Registevid At The G. P. O. Colombo As A Newspaper.

# திராவிடன்

## THE DRAVIDAN.

A Mo[illegible] Newspaper.

"சமன்செய்துசீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற்
கோடாமைசான்றோர்க்கணி."

சந்தா விளம்பரம்.

தபாற்செலவின்றி வருஷமொன்றுக்கு ரூ. 1-00
தபாற்செலவு உட்பட „ „ ரூ. 1-25
மலாய்நாட்டிற்கு „ „ ரூ. 2-50
வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்
தனிப்பிரதி 10 சதம்.
முற்பணமாகவே அனுப்பவேண்டியது.

விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| 1 கலம் முதன்முறை | ரூ. 4 50 |
| ¾ „ „ | ரூ. 3 00 |
| ½ „ „ | ரூ. 2 50 |
| ¼ „ „ | ரூ. 1 50 |

அடுத்தமுறைகளில் ½ வாசி
சில்லறை விளம்பரங்களுக்கு ரூபாத்தொகை முற்காசு சட்டவேண்டும்.

புத்தகம்—1. யாழ்ப்பாணம்—சுன்னுகம்:—பிரபவஹூ வைகாசிமீ ௩௨௨ (1927 ஜூன்மீ 14) செவ்வாய்க்கிழமை. இலக்கம்—5

உ
கடவுள் துணை.

அங்கிங்கெனுதபடியெங்கும்பிரகாசமா
யானந்தபூர்த்தியாகி
யருளொடுநிறைந்ததெதுதன்னருள்வெளிக்குளே
யகிலாண்டகோடியெல்லாந்
தங்கும்படிக்கிச்சைவைத்துயிர்க்குயிராய்த்
தழைத்ததெதுமனவாக்கினிற்
றட்டாமனின்றதெதுசமயகோடிகளெலாந்
தந்தெய்வமெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந்தெதிர்வழக்கிடவுநின்றதெது
வெங்கணும்பெருவழக்காய்
யாதினும்வல்லவொருசித்தாகியின்பமாய்
யென்றைக்குமுள்ளதெதுமேற்
கந்தல்பகலறநின்றவெல்லையுளதெதுவது
கருத்திற்கிசைந்ததுவே
கண்டனவெலாமோனவுருவெளியதாகவுங்
கருதியஞ்சலிசெய்குவாம்.

## விசேஷ அறிக்கை.

1. திராவிடனுக்குச் சந்தா தாராகச்சேர விரும்புங் கனவான்கள் முற்பணமனுப்பியேனும் அல்லது வி. பி. மூலமாயேனும் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

2. பணமனுப்புகிறவர்கள் பொக்கிஷதார் யாழ்ப்பாணம் தாழ்த்தப்பட்டவர்களின் சங்கம், சுன்னுகம் என விலாசமிட்டனுப்பவேண்டும்.

3. உள்ளூர்ச் சந்தாதாரர்களும் மேற்காட்டிய விதமே சந்தாத் தொகையைக் கட்டி ரசீது பெற்றுக் கொள்ளவும்.

4. கடிதமெழுதுவோர் தங்கள் விலாசத்தைத் தெளிவாய் ஒவ்வொருமுறையுமெழுதவேண்டும்.

திராவிடன் ஆபீஸ்,
சுன்னுகம்.

### அறிக்கை.

ஐயா, திராவிடன் பத்திரிகையின் சந்தா முற்பணமாகவே கொடுக்கப்படுகிறது. தயவுசெய்து தங்களால் வரவேண்டிய வருடசந்தா ரூபா 1—25 அனுப்பி எங்களை உற்சாகப் படுத்தி வைக்கும்படி கேட்கின்றேம். பத்திராசிரியர்.

### யாழ்ப்பாணம் தாழ்த்தப்பட்டவர்களின் சங்கம் சுன்னுகம்.

ஷை சங்கத்தின் மெம்பேர்களும் அங்கத்தவர்களும் தயவுசெய்து கவனிக்க வேண்டியது, தங்களால் வரவேண்டிய மாசாந்தக் கட்டணத்தைப் பொக்கிஷதாரிடம் கட்டி இரசீதுப்பெற்றுக்கொள்ளவும்.

## ஆஸ்பத்திரியின் ஆவசியம்.

சென்றமீ 26உ சுன்னுகம் தாழ்த்தப்பட்டவர்களின் சங்கத்தின் மீட்டிங்கில் கூடிப்பேசிய தீர்மானங்கள் இலங்கை வைத்தியலாக்கா அதிகாரிகளுக்கு எழுதியனுப்பியதின் சுருக்கம். அரசினரால் தொடங்க இருக்கும் ஆஸ்பத்திரியை சுன்னுகத்தில் தொடங்குவதால் வரும் நன்மைகளைப்பற்றியும் ஆவசியம் சுன்னுகத்திற்கு ஆஸ்பத்திரி ஒன்று வேண்டுமென்பதாகவும், சனப்பிளக்கமில்லாத இடம் குடிகள் நெருக்கமில்லாத இடம் சனங்கள் வந்துபோவதற்கு வசதியீனமான இடம் முதலியவைகளை அரசினர் அவசியங் கவனிக்கவேண்டும், சனப்பிளக்கமும் குடிகள் நெருக்கமும் சகல சனங்களும் வந்து போவதற்கு வசதியும் தண்ணீரின் சுகம் முதிலியவைகளையும் அரசினர் கவனித்துப் பார்க்கில் ஆஸ்பத்திரி கட்டுவதற்குரிய இடம் சுன்னுகமென்றேகொள்ளவேண்டும்.

## கிராமச்சங்கத் தெரிவு.

சென்றமீ 28உ யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு தெல்லிப்பழைப் பிரிவிற்குக் கிராமச்சங்கத் தெரிவில் பிறக்ரர் ஸ்ரீமான் குமாரசாமி அவர்களையே சர்வசன சம்மதத்துடன் வடமாகாண ஏசண்டு அவர்களால் தெரிந்தெடுக்கப்பட்டதற்காய் ஆசிகூறுகின்றேம். ஷை சங்க மெம்பேர்களிலும் புதிய திருத்த முறையாக இருவரைத் தெரிவு செய்யப்பட்டதாம். இதுமாதிரியே புதிய முறைகளை மற்றைய கிராமச் சங்கத் தலைவர்களும் கவனிக்கவேண்டும்.

## வெறியும் புதுமனைவியும்.

கற்கத்தாவில் ஒரு விவாக ஒழுங்கின்படி மாப்பிள்ளை பகுதியாரும் பெண்பிள்ளை பகுதியாரும் கலியாணத்திற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்துகொண்டிருக்கையில் மாப்பிள்ளை சீதனத்தைப் பற்றிய சூளப்படியால் மறுத்து விட்டான். பெண்பிள்ளை பகுதியார் இதையறிந்து ஷை மாப்பிள்ளையை ஓர் விருந்துக்கெனச்சொல்லி அழைத்துக்கொண்டுபோய் அவனது மதியை மயக்குதற்குக் குடியை அதிகமாகக்கொடுத்து அவன் மயங்கிக்கிடந்த வேளையில் அவனைத்தூக்கிக்கொண்டுபோய் ஓர் புரோகிதரையுமழைத்து விவாககாரியாதிகளை நிறைவேற்றி விட்டனர். இக்கிரியைகள் நடைபெறும்போது மாப்பிள்ளை அறிவற்றுக் கிடந்தான். மறுநாட் காலை வெறிமுறிந்து பார்த்தபோது அருகில் புதிய மனைவியுமிருக்கக் கண்டாச்சரியப்பட்டானும்.

## கூலியாயிருந்த கோடீஸ்வரன்.

சேர் ஹென்றி ஒயிட்ஹெட் என்பவர் இங்கிலாந்தில் பிராட்போர்டில் ஒருகம்பி உற்பத்திச் சாலைக்குச் சொந்தக்காரன். அவர் ஒருபெரிய கோடீஸ்வரர் இவர் சிறுவனயிருக்கும்போது ஒரு யந்திரசாலையில் ஒரு ஏழைக் கூலிக்காரனுக வேலைக்கமர்ந்தார். விதவையான தன் தாயைக் கூலிவேலைசெய்து காப்பாற்றினர். அவருக்கு இப்பொழுது அறுபத்தெட்டு வயதாகிறது உலகத்தில் நெசவு யந்திரசாலைத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் பெரிய முதலாளிகளில் இவரும் ஒருவராம்.

## குறைகூறுதல்.

(கண்ணன் எழுதியது)

நமக்கு நமது காரியங்களிலாகட்டும், பொதுக் காரியங்களி லாகட்டும் பிறருடைய உதவி அவசியம் வேண்டும் அவர்கள் அனுதாபத்துடன் பொருளுதவியோ உடலுழைப்போ அவசியம் வேண்டும். நாம் எதிர்பார்க்கவும் நியாயமுண்டு ஆனல் சிலர் தங்களுடைய முயற்சியும் செய்கையும் சற்றுமில்லால் தனிப்பட்டவர்களுடைய உதவியையோ அல்லது பொது சனங்களுடைய உதவியையோ எதிர்பாக்கின்றூர் எதிர்பார்க்கிற உதவி கிடைக்காதபோது அவர்களைக் குறைகூறத் தொடங்குகிறூம்; இப்படிக் குறைகூறுகிறவர்கள் அநேகமாய்த் தாங்கள் செய்பவேண்டியதைச் செய்யாமல், செய்யக்கருதி யிருப்பதற்கு உதவியைநாடி அது கிடையாதபோது, தாங்கள் செய்ய வேண்டிய முயற்சியானது ஆதரவின்றி நசிந்துவிட்டதென்று குறை கூறுகின்றூர்கள்.

இப்படிக்குறைகூறித்திரிபவர்கள் தேசத்திற்கு ஒரு பெரிய நோய்போன்றவர்கள் என்பது எனது கருத்து சதாபிறருடைய ஆதரவினல் முன்னுக்குவர முயலும் சுயநலக்காரர்களே ஒழிய ஊக்கத்துடன் உழைக்கும் உறுதியாளர்கள் அல்ல. அதிருப்தி என்பது இவர்கள் முகத்தில் எழுதிஒட்டியிருக்கும் இக்கதையை மனிதர்களுக்கு ஆதரவளிக்க யாரும் முன்வரமாட்டார்கள் ஆதரவு அளிக்கவும் கூடாது. பொது சனங்களுடைய ஆதரவும் தனிப்பட்டவாகளின் ஆதரவும் வேண்டுபவர்கள் முயற்சியுடன் தங்கள் வேலைகளை ஆரம்பித்து அதன் வளர்ச்சியின் பலனைக் கொண்டே தான் பொது சனங்களுடைய ஆதரவை நாடுவார்கள் அவர்கள் அதிகம் பேசமாட்டார்கள் உடனே ஆதரவு கிடைக்காவிட்டாலும் குறைகூறுமலும், சோர்வடையாமலும் தங்களுடைய கடமையைச் செய்து, தங்களுடைய முயற்சிகளுக்குப் பொது சனங்கள் தாமாகவே உதவிபுரியும்படி செய்வார்கள்.

ஆகையால் சகோதர சகோதரிகளே! நாம் நம்முடைய தனிப்பட்ட வேலையிலும் சரி, பொது ஊழியத்திலும் சரி நம்முடைய கடமையைச் செய்துகொண்டே உதவியை எதிர்பார்த்தல் அவசியம் கிடைக்கும் அப்படிக் கிடைக்காமல் அந்த வேலையானது பயனற்றுப் போய்விட்டால் அது நம்குற்றமாகாது கண்ணபிரான் கீதையில் சொல்வதுபோல வேலையைச் செய்பவேண்டியது நம் கடமை. பலனை எதிர்பார்ப்பது நம்'பொறுப்பல்ல.

(லோகோபகாரி.)

## பணத்தின் விசாரமும் தன்மையும்.

ஒருமுறை நம் பாட்டியாராகிய ஒளவையார் கிராமத்தி னூடாகச் சென்றபோது செட்டிகள் வசிக்கிற தெருவைச் சந்திக்க நேரிட்டது அத்தெருவீட்டில் ஒரு அறையின் பக்கலில் சோபா ஒன்றின்மீது ஒரு செட்டியார் அமர்ந்திருந்தார். அப்பொழுது நடுப்பகலில் நடுத்தெருவில் நடையாக நடந்துகொண்டிருந்த நம் பாட்டியைப் பார்த்து "அம்மா, தாயே, இக்கடும் வெயிலில் எங்கு போகின்றீர்கள்? தங்கள் தள்ளாத காலத்து தாம் எரியும் தணலைப் போன்ற தெருமீது நடந்து போகலாமா? வாருங்கள் எங்கள் வீட்டிற்கு. வெயில் கடுமை குறைந்ததும் செல்லலாமே" எனச் சொல்லி அழைத்துத் தன் வீட்டுத் திண்ணையில் உட்காரும்படி கூற ஒளவையாரும் இசைந்துகொண்டார். செட்டியார் உள்ளே போய் விசிறி கொண்டுவந்து ஒளவையாரின் களைப்புத் தீரும்படி விசிறினர். தாகசாந்தி செய்துகொள்ள ஜலமுங் கொடுத்தார். ஒளவையாரும் தண்ணீர்குடித்ததும் மனம் குளிர்ந்து, மனமாரச் செட்டிமன்னரை வாழ்த்திவிட்டார் அப்போது செட்டியார் ஒளவையாரைப் பார்த்து "அம்மையாரே! உம்முடைய மனம் மகிழ்ந்திருக்கும் இச்சமையத்தில், தங்களிடம் ஒரு வார்த்தை பேசிக்கொள்ள விரும்புகின்றேன். எனக்கு இப்பொழுது பன்னிரண்டு லக்ஷத்திற்கு மேலாக ஆஸ்திரொக்கமாக இருக்கிறது. ஒவ்வொரு தினமும் பணத்தை ஒருங்கே வைத்து எண்ணிப்பார்த்து அளவில்லாச் சந்தோஷத்துடன் அகமகிழ்கின்றேன். என் பணத்தைப் பார்க்கப்பார்க்க எனக்குப் பிரமையுண்டாகிறது. என் காலத்தில் நான் சம்பாதித்து வைத்திருக்கும் இப்பணம் என் பேரன் பேரன் காலவரைக்கும் தாராளமாகச் செலவழிக்கக் காணும். இன்னுஞ் சம்பாதிக்கவேணுமே யென்ற பேராசை மாத்திரம் எனக்கு இல்லை. ஆயினும் அல்லும் பகலும் அறுபது நாழிகையும் என்னுடைய மனத்தில் ஒரு பெரிய விசாரம் குடிகொண்டிருக்கிறது. எனக்கு வயசு இப்பொழுது இருபத்தைஞ்சு ஆகிறது. இன்னும் நான் எவ்வளவு காலம் வாணுள் நடத்தப்போகின்றேன்; எப்படி இப்பொருளைச் சாக்கிரதையாய் வைத்துக்கொண்டிருப்பது என்னும் விசாரமே என் மனத்தில் குடிகொண்டிருக்கிறது. இவ்விசாரத்தினுல் தூக்கமே கிடையாது. பணமிருந்தாற்றூனே இந்தவிசாரமேற்படுகின்றது. எப்படியுமிதைச் செலவுசெய்து தொலைப்போமென்றுல் செலவழிக்க வழி தெரியவில்லை. புத்தியில்லாது பணமிருந்து என் செய்வது? இதுகாரியமாக அம்மா நீங்கள் தகுந்தபுத்தி புகட்டுவீர்களென் றெண்ணுகின்றேன்" எனப்புகன்றூர். இதனை நேரிற் கேட்டுக்கொண்டிருந்த பாட்டியார் உடனே செட்டியாரை நோக்கி கீழ்வருமாறு கூறினுர்.

செட்டியாரே! எங்களெண்ணத்தின்படி நாமெல்லாரும் எப்பொழுதும் சுகசீவிகளாக இருக்கப்போகிறதில்லை நம்முடைய வாழ்வாவது மாயம்; இந்த உடல் மண்ணுவது திண்ணம் நமக்கு எப்போது பிறப்பு உண்டாயிற்றே அப்போதே இறப்பு உண்டாவது உண்மை ஆதலால் இன்னும் நெடுநாள் நிலைத்துச் சீவிக்கப்போவதாகக் கொண்டிருக்கும் நினைப்பை நீர் நீக்கிவிட வேண்டும். நமதுடல் சௌக்கியமானதல்ல. பலவிதமான பிணிகளுக்கும் பிறப்பிடம் இன்று சந்தோஷ சௌக்கியமாயிருப்பவன் நாளைக்குஞ் சீவித்திருப்பானென்று நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. சூத்திரத்தினுல் ஆட்டப்படும் மரப் பொம்மைகள் நம் உடல் உயிர் என்னும் ஆவியினுல் ஆட்டப்படுகின்றது. அவ்வுயிரான ஆவி எப்பொழுது இந்த உடலைவிட்டு நீங்குமென்பது நமக்குத் தெரியாது. செட்டியாரே! சோறிட்டுவளர்க்கும் இப்பொய்யான உடலை மெய்யென்றிராதையும் என்றூர் பாட்டி.

## "கனகம்."

(பா. கி. எழுதியது,)

"அன்னவாச"த்திற்கு" முன் ஓர் கார் வந்து நின்றது சாயந்தரம் நாலு அல்லது நாலரை மணி நேரமிருக்கும், காரிலிருந்து, பொது நிறமுடையவளும் சறறேறக்குறைய 18 வயதுள்ளவளுமான ஓர் இளங்கன்னிகை தற்காலத்திய அநாகரீக உடையின்றி உயர்ந்த ஓர் பெங்களூர்ச் சேலையை முதுகில் வாலின்றி உடுத்தியும், பிறர் தன்னை நகைகாய்த்த மரமென்று நினைக்காவண்ணம், காதுகளில் சிறு வயிரமும் கழுத்தில் ஓர் தங்க சங்கிலியும், கைகளில் ஓர் சோடி தங்கவளையல்களையும் அணிந்தவளாய், காலில் செருப்புடன் இறங்கி ஆவலுடன் யாரையோ எதிர்பார்த்தவளாய், அவ் வீட்டின்வாயிலை நோக்கி நடந்தாள்.

எதிர்பார்த்துப் போகுமிவளை இவளிலும் கொஞ்ச மிளவயதுள்ளவளும் அழகுவாய்ந்தவளுமாகிய, ஓர் பெண் என்ன? கனகம் உன்னைப்பார்த்து கண்ணும் பூத்து விட்டது. றெயின் (Train) என்ன லேற்று (சுணங்கி) வந்ததா அல்லது காருக்கு ஏதாவது ஆக்விடென்ட்டா (அசம்பவம்)? நீ வருகின்றூயோ, இல்லையோவென்று கிலேசப்பட்டுக் கொண்டிருந்தேன் வா உள்ளே போவோமென்று சொல்லி இருவருங் கைகோர்த்துக்கொண்டு தோட்டத்தின் வழியாக உள்நோக்கிச் சென்றூர்கள்.

போகையில் வீட்டில் மாமா, மாமியை விட வேறுயார் இருக் கின்றூர்களென்று கேட்டுக் கொண்டே நடந்தாள் கனகம்.

ராசம்—"மம்மா (Mamma) உங்களுடையருமை மருமகள் வந்துவிட்டாள் இனிவருவளா, வருவாளாயென்று என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள் பப்பா எங்கே பப்பா, பப்பா"வென்று கூவிக்கொண்டே தோட்டத்தினுட் சென்றூள்.

கனகத்தின் மாமியாகிய அன்னம்மாள் அவளைத்தழுவிக் கொஞ்சி முகத்தைத்துடைத்து வாமகளே! களைத்துப் போயிருக்கிறூய், அண்ணன் சொன்னமாதிரி உன்னைக்கொழுக்க வைக்கவேண்டும் உம், அடே முத்தா? தங்கச்சியினுடைய சாமான்களையெல்லாம் காரிலிருந்து கொண்டுவா! வந்தகளை தீரக்கொஞ்சம் டீ குடி மகளே என்று உள்ளுக்குக் கூட்டிச்சென்றூள்.

இராப்போசன மருந்திய பின்னர் யாவரும் ஹோலில் இருந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஹோலில் இருந்த மணிக்கூடு டிங், டிங்கென்று பத்து மணி அடித்தது. அப்பொழுது ராசத்தின் தகப்பனும் சிங்கப்பூர் பென்ஷன் காரருமாகிய விசுவநாதபிள்ளை "என்ன இந்தப்பிள்ளைகள் நெடுகப் பேசிக் கொண்டிருப்பார்கள் போல இருக்கின்றது போய்ப்படுங்கள் நாளைக்கு மிச்சத்தைக் கதைக்கலா"மென்று சொன்னுர் உடனே மச்சினிமார் இருவரும் சனியனெழுந்ததென்று அவ்விடத்திலிருந்து மூனு முனுப்பதைவிட தங்களுடைய அறையில் பேசிக்கொள்ளுவோ மென்று எழுந்து சென்றூர்கள். போய் விளக்கெரித்தால், பிடிபட்டுப்போவோ மென்றெண்ணி விளக்கையும் நூர்த்துவிட்டுப் பேசத்தொடங்கினுர்கள்.

ராசம்—மச்சாள், நீ அதிர்ஷ்டசாலி தான், இந்த வருஷம் அட்டமத்து வெருஷமென்றூலும் உனக்கு நல்லகாலம் தான் நீ யூனியரில் தேறினதொன்று, இரண்டாவது நீ உன்னுடைய எசமானியாகவோ நான் கிட்டிவிட்டது.

தொடர்ச்சி நாலாம்பக்கம்.

விளம்பரம்.

இலக்குமி வாசம்.

மு. ச. சுப்பிரமணியம் சகோதரர்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

மேற்படி கடையில் திராவிடன் பத்திரிகை விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.



# திராவிடன்.

சுன்னாகம்:— 1927,
வைகாசிமீ 32உ செவ்வாய்க்கிழமை.


கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க, முன்னின்றுபின்னோக்காச்சொல். குறள்.

## கண்ணிருந்தும் கபோதிகள்.

3

நாகரீகமடைந்த அநேகர்கள் தாங்களிருந்து வசிக்கவேண்டிய வீடுகளை, சுகாதார விதிகளின்படி கட்டக் கவனியாது மேலயதேச "வங்களா" மாதிரியாகத் தங்கள் வீடுகளைக் கட்டிக் கொளுக்கிலுடுகளைக் கொண்டு வேய்ந்து, கோடைகாலங்களில் சொள்ளிவாயிற் பட்ட எறும்புகளைப்போல அந்தரிப்பதைவிடவும், எங்களுடைய திராவிட சிற்பிகளுடைய புராதன புகழ் மங்குவதற்கும் முக்கிய காரணமாகவிருக்கின்றது. இதுவுமன்றிக் கஷ்டப்பட்டு உழைத்த **10000, 20000** ரூபாய்களை, இவ்வீட்டுக்களில் போட்டு, காசு தேவையான நேரங்களில் இம்முதலில் ¼ பங்கும் ஈட்டின்பேரில் எடுக்க முடியாமல் அல்லற்படுவது எல்லாரும் அறிந்த விஷயம்.

இந்நாகரீகத்தில் ஈடுபட்டவர்களும் (புலியைப் பார்த்து சூடுபோட்டுக்கொண்ட பூனையைப்போல) ஏனையவர்களும் தங்கள் வீடுகளில் இருப்பதற்கு வசதியீனமானதும், மூட்டைப்பூச்சிகளுக்கு வாசஸ்தானமாகவுமிருக்கக்கூடிய (Furniture) கதிரைகள் முதலானவைகளைக்கொண்டு நிரப்புகிறார்கள். சிலர் ஓர் படி மேலேறினவர்கள் கண்ட கண்ட வெந்தீஸ்களுக்குச்(Auction sales) சென்று மலிவாயும், பிறர் மதிக்கும்பொருட்டும் பயனற்ற சாமான்களை வாங்கி வீடுகளை நிரப்புகிறார்கள். இப்படி நிரப்பி வைத்திருக்கும் இவர்களுடைய வரவேற்குமறையை (Drawing Room) தானும் மேலைய தேசத்தார்க்கு நகைப்புக்கோர் இடமாயிருக்கின்றது. மேலைத் தேசங்களில் அவர்களுடைய (Furniture) பர்னிட்சர்கள் அவர்களுடைய சீதோஷ்ணஸ்திதியைப் பொருந்தியும், ஒவ்வோர் சென்ற காலங்களிலிருந்த முறைப்படி (Queen Anne's, Louis XIV, Elezebethiau) யுள்ளவைகளைக்கொண்டு தங்கள் வீடுகளை அலங்கரிக்கின்றார்கள் எங்களவர்களோ "குரங்கின் கையில் பூமாலை கிடைத்ததைப்போல்" திருஷ்டாந்தமாக ஒருவர் வீட்டில் மிகவும் விலையுயர்ந்த சோபாவின்பேரில் ஆட்களிருப்பதற்குப் பதிலாக இரண்டு நெல்லு மூடைகள் இருக்கக் கண்டோம்; இந்த நெல்லு மூடைகளுக்கு கீழே யிருக்க ஏலாதுபோலும். கதிரைகளின்மேல் ஆட்கள் இருந்துகொண்டு கால்களை உயர்த்தி மேலே வைத்துக்கொள்ளும் பழக்க வழக்கங்களைச் சொல்லப்புகின் வளரும் இன்னும் அநேகர் இவர்கள் யாழ்ப்பாண ஜனசமூகத்தில் முந்தியவர்கள் (Society people or those in higher social circles) மிஷன் பள்ளிக்கூடங்களில் படிக்கும் காலத்தில் மிஷன் வீடுகளிலோ அல்லது கொழும்பு முதலிய பிறதேசங்களில் கண்ட பழக்கத்தினலோ பிரயோசனமறியாமல் தங்கள் வீடுகளில் போவதற்கும் வருவதற்கும் வழியின்றி சாமான்களை நிரப்பி, சில வீடுகளில் மேற்படி அறைகளில் (Deck Chairs) சாய்வு கதிரைகளையும் போட்டு, போதாதற்கு (Piano) பியானோக்களைப் போட்டு சுத்தமாயும், தூசியில்லாமலும், காற்றுப் போக்குவரவாயு மிருக்கவேண்டிய இடங்களை மேற்சொன்னவைகளையிருக்ச்செய்து பல வியாதிகளுக்கும் உற்பத்தியிடமாக்குகிறார்கள்.

ஆனால் தற்காலத்தில் அநேகர் வெந்தீஸ்களில் எச்சிற்பீங்கான்களை (old China) பழைய சீனப்பாண்டங்களென்று—இவைகளைக் கையாள்பவர்களைப் பழைய சைனா என்றால் என்னவென்று கேட்கும்பக்ஷத்தில் அவர்களுடைய மறுமொழி சீனவையொத்ததாகவே யிருக்குமன்றி இப்பீங்கான்களை யொத்ததாயிராது—வாங்கி உபயோகிக்கப்படும் துரைமக்களாலேதான் பெரும்பாலும் மேற்சொல்லப்பட்டவைகள் நடத்தப்படுகின்றன.

இவ்வித தட்டுமுட்டுக்களுடன் மேசைகளிலிருந்து வாழையிலையின்றி இப்பீங்கான்களில் இவர்கள் பாவிக்கும் க்ரோக்கிரி (Crockery) வெஜ்வுட் (Wedge wood) எனப்படும் முதலியவைகளல்ல, ரோட்டு வழியே கொண்டுதிரிபவர்களிடம் 30—50 சதங்களுக்கு வாங்கியவைகளே.

இத்துடன் ஓர் கோப்பை கைபிடியில்லாவிட்டாலும், அது மற்றோரினத்தைச் சேர்ந்த பீலீசுடன் மேசையேறி நிற்கும். தேத்தண்ணீரருந்தும் பொழுது (Tea Cups) தேத்தண்ணீர் கோப்பைகளில்லாமல் (Coffee Cups) கோப்பிக்கோப்பைகள் நிற்பதையும் கண்டிருக்கின்றோம். மேலும் இதில் பலர் இயற்கையான கைகளைப் பாவிப்பதற்குச் சங்கடப்பட்டுக் கத்தி, முள், கரண்டி கொண்டு புசிக்கக் கண்டிருக்கின்றோம இவைகளை அநேகர் தங்கள் சாப்பாட்டு மேசைகளில் எந்தக்கத்தி யெந்தயிடத்திலிருக்கவேண்டுமென்றும், எக்கரண்டி எவ்விடத்திலிருக்கவேண்டுமென்றும் பாண் வைக்கும் தட்டம் (¼ Plate) எவ்விடமிருக்கவேண்டுமென்னும், அநேகர், நாப்கின்ஸ் யின்றியும் இருந்தாலும் விரிக்காமலும், விரித்தாலும் பாவிக்கத் தெரியாமல் வாயை ஆங்ஆங்கென்று திறந்து தின்னுவதுடன், எந்தச் சாப்பாட்டுக்குக் கத்தியைப்பாவிக்கவேண்டுமென்றும் எதற்குக் கரண்டியைப்பாவிக்கவேண்டுமென்று அறியாமல் இறைச்சிக்குப் பாவிக்கவேண்டிய முள் கத்திகளைக் கொண்டு மீன்களைத்தின்றும், பழவர்க்கங்களைத்தின்னுவதற்கேற்ற கத்திகளைக் கொண்டு இறைச்சிகளைத் தின்னுவதற்கெத்தனித்தும்; வேறுசிலர் இவர்களில் ஒருவர் கால்சட்டையுடன் வந்து ஓர் (Rest House) வாடிவீட்டிலிருந்து கையினால் அருந்துவதைவிட்டுகத்திமுள்ளைக்கொண்டு கோழியிறைச்சி தின்ன எத்தனித்து இவர் முள்ளினால் அமர்த்திக்கொண்டவ்விறைச்சியைக்கத்திகொண்டு வெட்ட; அது வேண்டாம் வேண்டாமென்பதைப்போல, பீங்காணிலிருந்து இரண்டு முறை வெளிப்பட்டது. அப்பொழுது நகைத்துக்கொண்டுநின்ற (Boy) வாடிவீட்டுக்காரன் என்ன எண்ணினனோ! சிலர் கத்திகளைக்கொண்டு (Pudding) தின்ன எத்தனித்ததை நாம் கண்டிருக்கின்றோம். ஆனால் நாக்கு வெட்டப்படாமல் தப்பியது கடவுள் சித்தம்போலும்.

ஆனலிப்பழக்கவழக்கங்களைக்கொண்டு வரத்தேண்டிப்பவர்களுக்கு (Weldons Pattern) பத்ரகங்களையறிந்தவர்களும், ஐமயடிர் டார்லிங்கு (My dear, Darling) இவ்வார்த்தைகளை ஆங்கிலேய மாதர்கள் தாங்கள் கொண்டுதிரியும் நாய்களுக்கும் உபயோகிக்கக் கண்டும், கேட்டுமிருக்கின்றோம். (My Love) இன்னுமிவ்விதமான வார்த்தைகளைத் தங்களுடைய கடிதங்களில் உபயோகிக்கக்கற்றவர்களும், காசு செலவழித்து நாகரீகக் கல்விகற்ற சகோதரிகளாலுங் கூட உதவிசெய்து பார்ப்பவர்களுக்குப் பகடியில்லாமல் கையாளவேலாதென்று நம்புகிறோம்.

இன்னும் என் வீடுகளைச் சித்திரப்படங்களைக்கொண்டு அலங்கரிக்கின்றோமென்பதை உணராமல் அநேகர் எந்த இடத்திலென்ன படமிருக்கவேண்டுமென்பதையும் தெரியாமல், ஒவ்வொரு வருணந்தோறும் கடை கடையாகச் சென்று பல்லைக்காட்டி, கெஞ்சி, மன்றாடி, மச்சான், அண்ணன், அப்பு, ஐயா என்று முறைசொல்லி காலண்டர்களை வாங்கிவந்து, பெரும்பாலும் சட்டங்கள் கண்ணாடிகளின்றி அவைகளைத் தூசி துடையாமல் தூக்கியும், மற்றவர்கள் தங்களால் சேட்டுங் கண்டுமிராத ஊர், இயற்கைத் தோற்றம், நடவடிக்கைகளையுள்ள படங்களையும் காசில்லாதவர்கள், கேட்டலாக் (Catalogue) களிலிருந்து வெட்டியெடுத்தும், எங்கள் வீடுகளை அலங்கரித்திருப்பது பார்ப்பதற்கு அவலக்ஷணமாயிருக்கின்றது.

## பொறுமைக்கும் பொய்க்கும் இடங்கொடேல்.

இவ்வுலகில் சீவிக்கும் மனிதர்களுக்கு பொறுமையின் தோஷத்தால் இயல்பாயுண்டாகும் தீயகுணங்கள் பலவற்றுள்ளும் பொய்யென்பதுவே முதலாவது. பொய் என்பது எக்காரணத்தைக்கொண்டேனும் உள்ளதை மறைத்து இல்லாததொன்றைச் சொல்லுவதாகும். அவ்விதமின்றி உள்ளதை யுள்ளபடி சிறிதேனும் மறைக்காது கூறுவதே உண்மையெனப்படும் ஒருவன் பொய்பேசுவதால் இழிவும் உண்மைபேசுவதால் உயர்வும் அடைவான். பொய் என்பது பலவகுப்பிற் கூறப்படும். உண்மையிலுள்ள ஒன்றை அதனளவுக்கு மீறிக் குறைப்பது அல்லது அதிகப்படுத்திக் கூறுதலாம் இல்லாததொன்றை உண்டெனக் கூறுதலும், ஒன்றை மறைத்து மற்றொன்றாகக் கூறுதலும் இன்னும் பல பிரிவு உண்டு. இவ்விதம் நாம் பொய் கூறுவதால் மறுமுறைக்குப் பின்னர் நம் மிடத்து பிறருக்கு நம்பிக்கை நாணயம் இல்லாமற்போவது அதனால் நமக்குத் துன்பங்கள் ஏற்படக் காரணமாகிறது சில சமையங்களில் நாம் பேசும் பொய் பிறருக்குத் தெரியவராமற்போவதால் நமக்குப் பிறரிடத்தில்மதிப்புக்குறைவுநேரிடாமலிருக்கலாம். எப்படியும் நாம் கூறிய பொய்க்கு நம்மனச்சாட்சி என்றைக்கும் நம்மை வருத்தி நிற்கும். நம் மனச்சாட்சிக்குத் தெரியாதபடி நாம் நினைப்பதும் செய்வதும் ஒன்றுமில்லை. ஆகையால் நாம் உண்மையை மறைத்துக் கூறுவதால் மனச்சமாதானமின்றி சதா திகிலையும் குழப்பத்தையும் வருத்தத்தையும் கொண்டு வரும். இக்கருத்தை ஒட்டியே "தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின், தன்னெஞ்சே தன்னைச் சுடும்" என்னுங் குறள் போன்ற எத்தனையோ பாக்கள் வலியுறுத்துகின்றது. இவ்விதமாக பல தீமைகளைச் சேர்க்கும் தகைமைகளினாலே யன்றோ ஆன்றோர் மனிதர்கள் செய்யத் தகாத பஞ்சமாபாதகங்களுள் "காதல் கவருடல் கள்ளுண்டல் பொய்மொழிதல், ஈதல் மறுத்தல் இவைகண்டாய்" எனக் கூறியும், பின்னும் உலகில் நடந்துவரும் கொடுமை முற்றிய செயல்கள் பலவற்றிற்கும் பொய் சொல்லுதலென்பது துணைக் கருவிபோன்றதாகும். ஆகலின் என்றும் பொய்பேசாது உண்மையே பேசுதல் வேண்டும். உண்மை கூறுவதால் நம் மனச்சாட்சிக்குத் திருப்தியும், நம்மீது யாவருக்கும் சந்தோஷமும் ஏற்படுவதுமன்றி புகழும் புண்ணியமும் என்னளு மழியாது. உண்மை யென்றும் தன்னைக் கடைப்பிடித்தாரை உயர்த்திவைக்கும். உண்மைக்கு ஒருபோதும் அழிவில்லை. சத்தியமே செயம் என்பன கவனிக்கத் தக்கவை. உண்மையே பொருந்திய ஒருவனுக்குத் தைரியமிருக்கும் உண்மை யில்லாதான் தைரியத்தை இழந்து விடுகிறான். சிலர் தாம் பேசுவது உண்மையே யாயினும் அதைப் பேசத்தெரியாது பொய்யாக்கி விடுகிறார்கள். அதாவது தன் முன்னிலையில் ஒரு திருடன் ஓடிப் பதுங்கி, தன் தலைக்குமேலிருந்த பரணில் ஏறி ஒழித்துக் கொண்டான்.

பின்னால் திருடனைத் தேடி வந்தவர்கள் இவனைக் கூவி இங்குவந்த திருடனைக் கண்டாயா என்று வினவியதற்கு இவன் உத்தரமாக இதோ என் தலைமேலிருக்கிறான் என்று கூற, தேடிவந்த அதிகாரிகள் இவன் நம்மைப் பரிகாசஞ் செய்கிறானென்றுசென்றுவிட்டனர். இதுபோன்று அம்மனிதன் கூறியது உண்மையெனினும் கூறிய தந்திரப் பேச்சினால் பொய்யாகிவிட்டான். நாம்பொய்பேசித்தீரவேண்டிய சமையங்களும் சில வாய்ப்பதுண்டு சமையம் நோக்கி அவ்விதம் பேசும் பொய் பெரும்பயனளிக்கின்றது. எவ்விதமெனில் தம் கற்பைக் காப்பாற்றும் நிமித்தமாகத் துரத்தப்பட்டு ஓடி ஒதுக்கிடந் தேடிய பெண் ஒருவள் நம் கண் முன்னிலையில் மறைந்து ஓரிடத்தில் ஒளித்துக்கொள்ளுகிறாள். முன் துரத்திய துஷ்டன் அந்தப் பெண்ணைக் கண்டாயாவென நம்மைக் கேட்கையில் நாம் பார்த்திருந்தும் பார்க்கவில்லையென ஒருபோக்குச்சொல்லி அந்தப் பெண்ணைக் காப்பாற்றவேண்டுவது முறையாகும். இவ்வித சமயங்களிலன்றி சதாவும் பொய்பேசப் பழகிக் கோளுங் குண்டணியுமாகக்காலங் கழிப்பதற்கே பழகி தம்மையுங் கெடுத்து தம்குழந்தைகளையுங் கெடுத்து, இன்னும் வேண்டிய நற்கருமங்களிலீடுபட்டு அதனையும் ஒருவாறு பொய்யாக்கி உள்ளதையுங் கெடுத்தான் கொள்ளிக் கண்ணன் என்பதாகவே முடிகிறது.

V. M. K.

## கணவனிடம் நடந்துகொள்ளவேண்டிய மனைவியின் கடமையென்ன?

:0:

ஒருபெண்ணானவள் தன் தாய் தந்தையரை விட்டு தனக்கென வாய்க்கப்பெற்ற கணவனிடம் நடந்து கொள்ளவேண்டிய முறையும், கணவன் தன் மனைவியிடமாக நடந்துகொள்ளவேண்டிய விதியைப்பற்றியும் சிறிது கவனிப்போம் பெண்ணெனப் பிறந்தவர்களுக்கு எவ்வித வகையினாலும் ஒப்பின்றிச் சிறந்தது கற்பேயாகும் கற்பு என்பது எது? என்று கவனிக்கும்போது "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என அறிவுடையோர் அருளிய திருவாக்கால் தெரிகின்றது. அதன் பொருளாவது தன்கணவன் சொல்லை எவ்விதத்திலும் கடவாமல் அவன் சொற்படி அடங்கி நடப்பதே கற்பென்று சொல்லப்படும். இதற்குச்சில உதாரணங்கள் சொல்லலாம். எந்நாட்டுக்குஞ் சிறந்த திருவள்ளுவ நாயனார் என்னும் பெரியார் தம்மனையாளோடு இல்லறம் நடத்திக்கொண்டு வந்தார். ஒருநாள் இவருடைய ஞானத்தையும் பெருமையையும் கேள்வியிலறிந்த ஒருவன் அவரிடம சென்று ஐயா! இல்லறம் நன்றா? துறவறம் நன்றா? என்றுகேட்டனன். அதற்கு மறுமொழியாக ஒன்றுஞ் சொல்லாது கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்த தம் மனைவியை, பாதிக் கிணற்றில் தண்ணீர வரும்பொழுது, இங்கே வாருமென்றழைத்தார். உடனே இறைத்தகையை விட்டு விட்டு கணவனிடம் வந்ததும் தண்ணீர் கீழ் இறங்காது பாதிக்கிணற்றில் அப்படியே நின்றது. பின்னும் சிறிது நேரங்கழித்து. பகல் நடுப்பொழுதில் தன்னுடைய நெசவு தறியிலிருந்து பிடவை நெய்துகொண்டிருந்தார் அப்பொழுது அவர்கையிலிருந்த தார்க்குழல் தவறிக் கீழே விழுந்துவிட்டது. குழலைத்தேடியெடுப்பதற்கு கை, விளக்கு கொண்டுவரும்படிக்கு மனைவியிடங் கூற அவவும் யாதும் பேசாது விளக்கைக் கொழுத்திக்கொண்டு வந்தாள். உச்சிப்பொழுதில் விழுந்தசாமான் தெரியவில்லை, விளக்குவேணுமென்றால், அறிவற்றபெண்கள் தமது கணவரைப்பார்தது உமது கண்ணவிந்து, போய் எவ்வளவு காலம்? பட்டப்பகலில் கைவிளக்கா? பயித்தியமா? எனச்சொல்லி மறுத்துவிடுவார்கள் ஆனால் திருவள்ளுவநாயனாரது மனைவியோ அப்படிக்கில்லை சிறந்த கற்புடையவளா யிருந்தபடியால் தான் தன் கணவன் சொல்லுக்கெதிர் இன்றி அப்படியே கேட்டுநடந்தாள் இவைகளையெல்லாம் நேரில்பார்த்துக் கொண்டிருந்த கேள்விகேட்கவந்த மனிதன் தன் மனசிற் குடிகொண்டிருந்த சந்தேகம் நீங்கி இப்படிப்பட்ட பெண் (மனைவியாக) வாய்த்தால், இல்லறமே நல்லறமென்றெண்ணி, திருவள்ளுவநாயனாரைப் பார்த்து, ஐயா! எனமீது குடிகொண்டிருந்த சந்தேகம நீங்கப்பெற்றது. நான் சுகமே போய்வருகிறேனென்று சொல்லிப்போய் விட்டான்.

இன்னும் கர்ணகியாளின் கற்பின் பெருமையைப்பற்றி எல்லோரும் அறிந்திருப்பீர்கள் அப்பெண்மணி இன்றும் குன்றிலிட்ட விளக்குப்போல விளங்குவதும் கணவனாகிய கோவலன் பலவருஷங்களாக கர்ணகையை விட்டுப்பிரிந்து, மாதவியென்னுந் தாசியின் வலையிற்சிக்கி அவளுடன் கூடிவாழ்ந்து வந்தான் அவளிடம் தன் பெருஞ் செல்வமெல்லாந் தொலைத்து அப்பால் அவளை வெறுத்து கர்ணகியிடம் சென்று என்கையில் யாதொரு காசு மில்லை இவ்வூரில் தலைகாட்டவெட்கமாயிருக்கிறது என்றுசொன்னான் அப்பொழுது கர்ணகி ஐயனே! கவலையை நீக்கும என்னிடம் இரண்டு சிலம்புகள் மாத்திரமிருக்கிறது அவற்றைவிற்று உம்முடைய செலவுக்கு எடுத்துக்கொள்ளுமென சொன்னாள் இதைக்கேட்ட கோவலன் மிகவும் சந்தோஷத்துடன் உன்னுடைய சிலம்பை மதுரையில் விற்று வியாபாரம் செய்யப்போகிறேன் நீயும் என்னுடன் புறப்படு என சொல்லியவுடன் கர்ணகியும் யாதும் பேசாது உடனே புறப்பட்டு முன்னூற்றுப் பத்துமைல் நீளம் முழுவதும் வெயிலில் நடந்து, துன்பமடைந்து தன் வாய்விட்டுச் சொல்லாது, பொறுமையோடு கணவனுடன் வழிநடந்தாள். கற்பின் பெருமையை இன்றும் கொண்டாடுகின்றார்கள் கற்புடைய மாதர்கள் என்ன நினைத்தாலுமகை கூடும் கற்புடைய மங்கையருக்காய் ஒரு மழைபெய்யுமென்று பழமொழியால் தெரிகின்றோம். திருவள்ளுவநாயனாரும் "தெய்வந் தொழாள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யுமழை" என்று கற்பின் பெருமையைத் திருவாய் மலர்ந்தருளினார். தன் வீட்டிற்கு விருந்தாளிகள் வரும்போது அவர்களைச் சந்தோஷத்துடன் வரவேற்று தன் கணவன் விருப்பின்படி அவர்களை உபசரித்தல் கற்

புடைய பெண்ணின் கடமையாகும். தன் கணவன் ஆரையேனும் சாப்பாட்டிற்கு அழைத்துவந்து விட்டால் முகத்தைச் சுளித்து முணுமுணுத்துக் கொண்டு, "எப்போதும் இந்த இழவாய்த்தான் முடிகிறது என்று சொல்லும் பெண்களை தற்காலத்தில் அதிகமாய்ப் பார்க்கலாம். இது கற்புடைய பெண்ணுக்கு சிறிதும் பொருந்தாது. பசியால்வருந்தும் ஏழைகளுக்கும் முற்றத் துறந்த முனிவருக்கும் அறிவுடைய ஆன்றோருக்கும் உணவளித்துப் பாதுகாப்பதுவே இல்லறத்தின் ஒழுக்கமென்பது அறநூல்களின் முடிந்தமுடிவாகும் இவர்களுக்கெல்லாம் பெண்ணானவள் சிறிதும் மனங் கோணாமல் தன் தகுதிக்கேற்ற வாறு தருமஞ் செய்தல் வேண்டும்.

மனோன்மணியம்மாள்.

## மாற்றுப் பத்திரிகைகள்.

நம் திராவிடன் பத்திரிகைக்கு மாற்றுப் பத்திரிகையாக இந்துசாதனம் சோதிடபரிபாலினி சுதேசநாட்டியம் சன்மார்க்கபோதினி கலிகாலதீபம் மேல்நோக்கம் தேசபக்தன் சென்னை லோகோபகாரி ஆனந்தகுணபோதினி மதுரை வைத்தியசந்திரிகா பிரிட்டோரியா மெய்கண்டமித்திரன் குவலாலம்பூர் குணநாதன் திருச்சி பிரஜாநுகூலன் திண்டுக்கல் முத்திராஜன் ஷை நகரநாதன் என்னும் தமிழ் மாதாந்த வாராந்த வாரமிருமுறை மும்முறை வெளியாகும் பத்திரிகைகள் வருகின்றதற்காய் ஷை பத்திரிகைகளின் ஆசிரியரவர்களுக்கு எமது வந்தனம் மிகவும் மனமகிழ்வுடன் அளிக்கப்படுகிறது நம் திராவிடனையும் அனுப்புகின்றோம். ஷை பத்திரிகைகள் எல்லாம் நீடித்து தேசத்தொண்டு செய்யப் பரங்கருணைத் தடங்கடலாகிய எ. பெருமானை வேண்டுகின்றோம். ப-ர்.

## பதினேழு கிறிஸ்தவர் சைவராயினர்.

இந்துசாதனத்திலிருந்து அனுவதித்தது.

திரிகோணமலையின்கண்ணே ஈச்சிலம்பத்தை வாழைத்தோட்டமென இரு பெரும்பகுதிகளுள்ளன. இப்பகுதியிடமாக முருகப் பெருமான் மணமது கொண்ட வேட்டுவகுல மாக்கள் பலருளர். இவர்களுக்குள்ளேயும் கிறிஸ்து மதம் புகுந்துவிட்டது. இதையறிந்த திரு. கொட்டியாபுரவாசிகள் பலருஞ் சேர்ந்து ஸ்ரீமத் விபுலாநந்த சுவாமிகளுக்கு மனுச் செய்தனர். சுவாமிகள் நேரமின்மையினாலும் வசதிக் குறைவாலும் சின்னாட் கழித்து அவ்விடம வந்துசேர்ந்ததும அவ்வூரவாசிகள சுவாமிகளுக்கு வாழ்த்துக்கூறி வரவேற்றனர். பினபு சுவாமிகள் சைவசமயமென்னும் விஷயமாக நீண்டதோர் உபந்நியாசஞ் செய்து சைவசமயத்தின் உண்மையையும் அதன தழியா நிலைமையையும் நன்கு காட்டினர். இப்பிரசங்க மாரியைக் கேட்டிருந்த பதினேழு கிறிஸ்துவ வேடர் தம்மறியாமையை நீக்கிச் சைவசமயோபதேசஞ் செய்து தம்மை நல்வழிப்படுத்துமாறு ஸ்ரீமத் சுவாமிகளிடம் வேண்டிக் கொண்டனர். உடனே சுவாமிகள் அவர்களை நீராடச்செய்து விபூதி சந்தனமளித்துச் சைவோபதேசஞ் செய்து தேவாரமோதுவித்தனர். பின் அவரைக் கொண்டு ஆலயதரிசனமுங் காட்டி அவரவர்க்குரிய கிறிஸ்துவப் பெயர்களையும் மாற்றிப் பலரையும் ஆசீர்வதித்து மீண்டனராம்.

விளம்பரம்.

## தமிழரின் ஐக்கியம்.

இலங்கையில் வாழும் சிங்களர் தமிழரின் ஐக்கியவிஷயமாய் பாக்களியற்றிப் பரிசு பெற்ற ஸ்ரீ வே. தா. தியாகராஜபிள்ளை போன்ற பெரியோருக்கும் பிரபுக்களுக்கும் அறியத்தரும் விளம்பரமாவது.

தமிள் மக்கள் தம்முள் ஒருசாராரைத் தாழ்த்தியும் ஒடுக்கியும் மிருகங்களினுங் கேவலமாக நடத்துவதை நிராகரித்தும் தமிழ் மக்களாகிய தம்முள் வித்தியாசமின்றி ஐக்கியம் வேண்டுமென்பதாக பாக்கள் அல்லது வியாச மூலமாகவேனும் எழுதி ஆவணிமாசம் 30-ந் திகதிக்குள் அனுப்பும வியாசங்களையேற்று தகுதியெனக்கண்டு 5 ரூபாய் பரிசு கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறோம்,

இங்ஙனம்
திராவிடன் ஆபீஸ்,
சுன்னாகம்.

## பொதுச் சமாச்சாரம்.

காலநிலை.

வெயில் உக்கிரமும் காற்றின் உக்கிரமும் தெரிய வருவதுடன் சில்லறைத் தெய்வங்களின் வேள்விகளும் பலிகளும் நடந்து ஒருவாறு முடிந்து வருகிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பாருடன் மற்றைய சாதியினர் சுறண்டிக்கொள்கிறார்களாம்.

### சேர், பொ. இராமநாதன் அவர்களின் விருப்பம்.

கௌரவ சேர், பொன்னம்பல இராமநாதன் அவர்கள் தாம் இறந்தபின் தமது தேகத்தைப் புராதன எகிப்தியர் செயத மாதிரியாக வாசனையூட்டிக் காற்றுப்புகாமல் ஓர் கல்லறையில் நின்றநிலையில் வைத்தல் வேண்டுமென்றும், இவ்விருப்பம் யாழ்ப்பாணச் சீவில் அதிகாரிகளுக்கு எதனவே தெரிவிக்கப்பட்டிருக்கிறதென்றும், அவர்கள் அதனை நகர சுகாதார அதிகாரிகளின் யோசனைக்கு அனுப்புவார்களென்றும் தெரிய வருகிறது.

சோதிட பரிபாலினி.

### இலங்கைக்கு வெள்ளி நாணயங்கள்

நாலுஇலட்ச ரூபா மதிப்புள்ள 50 சதம் 10சத இலங்கை வெள்ளிநாணயங்கள் லண்டனிலிருந்து அனுப்பப்பட் டிருக்கின்றனவாம்,

மே மாசம் 5-ந்திகதி இரணைதீவுக்கடலில் 66அடி நீளமும் 37அடி சுற்றளவுள்ள ஒரு பெரியமீன் அகப்பட்டது மூன்றுநாள்வரை உயிருடனிருந்து பின் இறந்துவிட்டதாம். அதனைக் கொழும்பிலுள்ள நூதனசாலைக்கு அனுப்பி யிருக்கிறார்களாம்.

## யாழ்ப்பாண வர்த்தமானம்.

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்குப் பகுதிக்கு சென்ற மூன்றுவருஷங்களாக மணியகாரன் வேலைபார்த்துவந்த ஸ்ரீமான் செல்லப்பா அவர்களை கொஞ்ச நாட்களுக்குமுன் தலைமைக்காரர்களை மாற்றிவிக்கும் பொருட்டு வந்த ஏற்பாட்டினால் இப்பொழுது வலிகாமம் கிழக்குப் பகுதிக்கு மாற்றப்பட்டார். இதைமுன்னிட்டு சென்ற புதன்கிழமை சாயந்தரம் மல்லாகம் இங்கிலீஸ் பள்ளிக்கூடத்தில், ஓர் பிரியாவிடைக் கூட்டம் நடந்தேறியது. இக்கூட்டத்திற்காக, மேற்படி பள்ளிக்கூடம் ஓர் கல்யாண மண்டபம்போல் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வலிகாமம்வடக்கைச் சேர்ந்த எல்லாக் குறிச்சிகளிலிருந்தும் பிரபுக்கள் வந்திருந்தார்கள். சரியாக 7மணியளவில் நட்டுவ மேளத்துடன் மணியகாரன் ஸ்ரீமான் செல்லப்பா அவர்களை கச்சேரித் தலைமை முதலியார் ராமலிங்கமவர்களால் எதிர்சென் றழைக்கப்பட்டு வந்து மேற்படி முதலியாரின் அக்கிராசனத்தின்கீழ் கூட்டம் தேவாரத்துடன் தொடங்கிற்று. இடையில் யாவரும் சிற்றுண்டியருந்தியபின் பிரியாவிடைப்பத்திரம் வாசிக்கப் பட்டது. பிறகு, சபையிலிருந்த ஸ்ரீமான் T. A. துரையப்பாபிள்ளை அவர்களும் கந்தரோடை S. கந்தையாபிள்ளை அவர்களும் பிறக்றுசியார் ஸ்ரீமான் K. தம்பையா அவர்களும் ஸ்ரீமான் V. குமாரசாமியவர்களும் ஸ்ரீமான் J. குமாரசாமி அவர்களும் உபாத்தியாயர் பரமானந்தியவர்களும் குறிப்புரைகள் சொன்னார்கள் இரவு கூட்டம் கலைந்தபிறகு மேற்படி மணியகாரர் வாணவேடிக்கையுடன் அவர் வீட்டிற்கு கொண்டுபோய் விடப்பட்டார்.

இப்பொழுது மாற்றப்பட்டு சென்ற, மணியகாரனுக்குக் கடவுள் கிருபைகூர்ந்து நீடிய சுகமும், செல்வாக்கும் கொடுப்பாராக வென்று பிரார்த்திக்கின்றோம். (பத்திராதிபர்)

இப்பொழுது, யாழ்ப்பாண மணியகாரராயிருந்து மாற்றப்பட்டு எங்கள் பகுதிக்கு வந்திருக்கும் V. M. முத்துக்குமாரு அவர்களுக்கு நல்வரவு கூறுகின்றோம். மேலும், புதிய மணியகாரரவர்கள் தயவுசெய்து இத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் படும் கஷ்டங்களை கவனித்து இத்துன்பங்கள் நேராவண்ணம் காப்பாற்றுவாராக. (பத்திராதிபர்)

### வேளாளரும் தாழ்த்தப்பட்டோரும்.

சென்ற மாதத்தில் நடந்தேறிய ஓர் கல்யாண வீட்டில் அவ்வீட்டார்களாகிய, தாழ்த்தப்பட்டவர்கள் வெள்ளை கட்டினார்களென்பதினால் இருதாரத்தாருக்கும் ஏற்பட்ட மனஸ்தாபத்தினிமித்தம் இச்சைவர்களாகிய தாழ்த்தப்பட்டவர்களில் கொஞ்சப்பேர் "இக்கரைக்கு அக்கரை பச்சையென்றெண்ணி" ... நுவிட்டது நானும் வந்துவிட்டேனென்னும் பகுதியோடு கலந்து இம்மனஸ்தாபம் அதிகரித்ததினால் வடமாகாண ஏஜண்டு துரை (Russel) ரஸ்ஸல் அவர்களை அப்புக்காத்து எம். எஸ். ராசரத்தினமவர்கள் கொண்டுவந்து வேளாளருக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மிடையே ஏற்பட்ட பிசகுகளைத் தீர்த்து மறுபடியும் சமாதான வாழ்க்கையை நடத்தும் வழியாகச் சமன்செய்யப்பட்டது. இவ்விஷயத்தில் ஊக்கத்துடன் சமாதானம் கொண்டுவரும் நோக்கத்திற்காக வேலைசெய்த இரு சாதியாருக்கும் நாம் சந்தோஷம் கூறுகின்றோம்.

### மணியகாரர் மாற்றம்.

யாழ்ப்பாண மணியகாரன் வலிகாமம் வடக்குப் பகுதிக்கும் வலிகாமம் வடக்கு மணியம் வலிகாமக் கிழக்குப்பகுதிக்குமாக மாற்றப்பட்டது

### கவணர்மாற்றம்.

இலங்கையின் கவர்ணராக இருந்த சேர் கியூ கிளிபர்ட் அவர்கள் மலாய்நாட்டிற்கு கவர்ணராக சென்றுவர இலங்கைக்கு சேர் ஸ்டான்லி அவர்களைக் கவர்ணராக நியமிக்கப்பட்டிருக்கிறாராம்.

### ஈவினையிலோர் கொலை.

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த ஈவினையில் சென்ற சில தினங்களுக்குமுன் மாதன் சின்னவன் வல்லி கந்தனை கத்தியால்குத்தி கொன்றுவிட்டானாம். சின்னவன் கந்தனின் வீடு சென்று கள்ளுக் கேட்டானாம். கந்தனின் மனைவியை நிந்தித்தானாம். இதனைக்கண்ட கந்தன் என்பவன் சின்னவனுக்கு ஓர் அடிபோட்டானாம் சின்னவன் கத்தியால்வெட்ட கந்தன் துரத்திச்சென்று பின்னரும் ஓர் அடி போட்டானாம். சின்னவன் பின்பும் அவனைக் கத்தியால் வெட்ட கந்தன் உடனே உயிர்துறந்தானாம்.

## உலகமும் குடிவகைவிலக்கும்.

—:0:—

(பிரயாணி)

உலகத்தில் குடிவகை தொன்றுதொட்டு இருந்ததாகவும் அவை கதைகளிலின்றிபழக்கத்தில் இந்தியாவில் மேலும் தென்தேசத்தில் குடிவகையைப் பாவிப்பவர்கள் பெரும்பாலும் குறவர், சோகியர், லம்பாடிகள், மறவர், எனப்படும் வகுப்பினரே. அதுவுமின்றி மேல்நாட்டு குடிவகைகளும் சென்னை ராஜதானியைவிட பம்பாய், வங்காளத்தில்தான் அதிகமாய் பாவிக்கப்பட்டு வருகின்றது. பம்பாய் கல்கத்தாமுதலிய பெரிய நகரங்களில் நாட்டுப் பகுதிகளினின்றும், லக்ஷக்கணக்கான சனங்கள் பொருளீட்டு நிமித்தம், வந்து, சொந்த வீடு வாசலின்றி, இனசனமின்றி, கட்டுப்பாடின்றி, தான் தோன்றிய தம்பிரான்களாய் தங்கள் விருப்பத்தின்படி வேலை யில்லாமலிருக்கும், சாயங்காலங்களிலும் இரவிலும் தவறனை தோறும், சென்று கெட்ட கூட்டாளிகளின் சகவாசத்தினால் குடிக்கப்பழகி நாளடைவில், கரையேறுவதற்கு வழியின்றி பிணிவாய்ப்பட்டு மாள்வதைக் கண்டிருக்கின்றோம். மேலும் ஐரோப்பாவில், குடிவகை பெரும்பாலும் பியர் (Beer, Ale, Stout) என்னும் ஒரு வகுப்பைச் சேர்ந்த குடிவகை பெரும்பாலும் எல்லாரினாலும் உபயோகப்பட்டு வருகின்றது. இக் குடிவகையை இங்கிலாந்திலிருந்து ஒழிப்பதற்கு முயன்ற அமெரிக்கன் புஸ்விப்புட் ஜான்சென் (Pussyfoot Johnson) ஆல்பர்ட் ஹால் (Albert Hall) கூட்டத்தில் கண்ணில் காயப்பட்டது மெல்லாரும் அறிந்தவிஷயம். ஆனால் மேல்வகுப்பைச் சேர்ந்தவர்கள் இந்நாடுகளிலில், விஸ்கி, வயன், ஜின், வெர்மத் என்னும் (Whisky, Gin, Wine, Vermouth Absinthe) பலகுடிவகைகளை, பசியைக்கொடுக்கின்ற தென்று எண்ணி (Appetiser) துவக்கி, கடைசியில் சாந்திகுடி யென்றும் (Sobering dose) ஒரன்ஸ் பிட்டாய்; கிறீம் டிமென்த் (Orange biliers, Gream de menthe) இவைகளைப் பார்த்தும், மறுநாள் தலையிடியைப் போக்குவதற்காக பிரான்டியும், சோடாவுமோ அல்லது பிரான்டியும் வென்னீரும் கண்காட்டி (Eye-openers) யென்று பாவிக்கிறார்கள். நாங்கள் பறீஸ் (Paris) முதலிய நகரங்களை விட்டு, மிச்சம் பிரபலமானதும், பிரிடிஷ் அரசாங்கத்துக்கு தலை நகரமாகிய லண்டனில், குடிவகையால், நேரிடும் கோலங்களைப் பார்ப்போம்.

(வரும்.)

## தீண்டாமை.

(முற்றொடர்)

மக்களுக்குள் பிறவியிலேயே உயர்வு தாழ்வைக் கற்பித்து அதற்குத் துணையாக "வருணாச்சிரம தருமம்" என்பதாக ஒரு பிரிவை உண்டுபண்ணி கடவுளின் முகத்திற் பிறந்தவர்கள் பார்ப்பனரென்றும் அடுத்த சிலர் கடவுளின் தோளிற் பிறந்தவர் க்ஷத்திரியர்களென்றும் மற்றும் சிலர் கடவுளின் தொடையிற் பிறந்தவர் வைசியர்களென்றும் மீதியுள்ளவர்களெல்லாம் கடவுளின் பாதத்திற் பிறந்தவர்கள். "சூத்திரர்கள்" என்றும் அச்சூத்திரர்கள் தங்களது அடிமைகள் தங்களது தொண்டுவேலை முதலியனசெய்வதற்கென்றேகடவுளாலுண்டாக்கிவிடப்பட்டவர்களென்று சொல்லுவதோடல்லாது இந்தச் சூத்திரர்களுக்கு எவ்வித சுதந்தரமுமில்லை யென்றும் சொத்துச் சுதந்தரத்தில்தானும் சுகம்வைத்து கொள்ளுவதற்குக்கூட பாத்தியதை யில்லாதவர்களென்றும் அப்படியே மீறி நடத்தியிருந்தால் பார்ப்பனர்கள் தம் பலாத்காரத்தினால் பிடுங்கிக் கொள்ளலாமென்றும் இன்னும் சகிக்க முடியாத அநேக இழி மொழிகளையெல்லாங் கற்பித்து, இவைகளுக்காதாரம் வேதத்திலேயே நிறுவியிருக்கிறதென்றும், வேதம் கடவுளா லருளப்பட்டதென்றும் அவ்வேதத்தைப் பிராமணர் தான் படிக்கவேண்டும் என்றும், மற்றவர்கள் படிக்கக் கூடாதென்றும் பார்க்க அல்லது கேட்கத்தானுங் கூடாதென்றும் அப்படிப் படித்தால் படித்தவரின் நாக்கை அறுப்பதுடன் கேட்டவர்கள் காதில் ஈயத்தைக் காச்சி காதிலூற்றி அவர்களின் நெஞ்சைப் பிளந்து கொன்றுவிட வேண்டுமென்பது வேதத்தின் கட்டளையென்றும் அதற்காய் வேண்டிய ஆதாரங்களைபு முண்டாக்கிவைத்து நம்மையும் இழிவுபடுத்த நினைக்கிறவர்களுக்கு நாம் புத்தி புகட்டாது முட்டாள்த்தனமாக நம்மைப்பற்றிக் கொண்டிருக்கும் நம் ஏழைத் தாழ்த்தப்பட்டவர்களின் நன்மையை நாடாது, நம் மடமையும் மாறாது, மக்களெல்லோரும் சமமானவர்களென்று நினைக்கக்கூடும் காலம் நாம் எதிர்பார்த்தபடி இன்னொரு வகுப்பாரை எங்களைவிடத் தாழ்த்தப்பட்டவர்களென்று எண்ணுங் கொள்கையே என்பதை நாமெல்லாம் ஒப்புக்கொள்வதால் மற்றொரு வகுப்பாருக்கு நாங்கள் அடிமை மக்களாகவேண்டி யிருப்பதையும் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டுகின்றோம். (மற்றொரு வகுப்பாரென்பது பிரமகுலம் அவர்களின் அடிமை மக்கள் சூத்திரர்) நிற்க பஞ்சமன் என்போன் யார் ஆதியில் மனுஷர் நான்குவகுப்பாகப் பிரிந்திருக்கின்றார்கள் அப்பால் மனிதருள் மைக்கு முழுதும் மாறான கொலை, களவு, கள், காமம், பொய் எனப்பட்ட ஐந்து பழிச் செயல்களாகிய பஞ்சமா பாதகத்தை எவன் செய்தானோ அவனை ஐந்தாவது வகுப்பு, பஞ்சமன், என்று ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். பறையடிக்குந் தொழில் விசேஷமெனக் கைக்கொண்டதால் பறையர்களென்றொரு காரணப்பெயராக ஏற்பட்டது. காலத்திற்கேற்றவாறு தம்சீவியத்தைக் கழிக்க வேண்டி பற்பல தொழில்முறைகளை செய்யும் படியாகவும் நேர்ந்தது. தொழில் வேற்றுமையினால் இழிவாக நினைந்து அவர்களைக் கொடுமைக் குட்படுத்த வேண்டி நியாயமில்லை. தொழில்தான் இழிவேயன்றி தொழில் செய்கின்றவர்கள் எல்லோரும் சமத்துவமானவர்கள் தான். தொழில் வேற்றுமையினால் இழிவெனக் கொள்ளப்பட்டால் மற்றோர் தொழில்களையும் கணக்கிட்டு சாதியை நிர்வகித்துவிட வேண்டுமன்றோ பஞ்சமா பாதகத்தை ஆதாரமாய்க் கொண்டால் உலகத்தில்வாழும் மக்கள் எல்லோரும் பஞ்சமர்கள்தான். ஏனெனில் ஏழைகளான பஞ்சமர்கள்பேரில் பஞ்சமா பாதகத்திலுங் கொடிய பாதகத்தைச் சகலருஞ் சேர்ந்து பழிசுமத்தி நெடுங்காலமுங் கொடுந்துன்பஞ் செய்துவந்தால் தெய்வத்திற்குத்தான் பொறுக்குமோ? பஞ்சமரெனக்குறிக்கும் தாழ்த்தப்பட்டோன் ஒருவன் தலை மொட்டையடித்து சுன்னத்துச் செய்து கொண்டால் வாருங்கள் (காக்கா) யென்றும் அவர்களே யென்றும் அழைத்துக்கொண்டுபோய் நடுவீட்டில் சேர்த்து மரியாதை செய்வதும் இந்து மதாச்சார ஒழுங்கில் அணுவெனுந் திறம்பாது. தெய்வபத்தி யுடையவராக மற்றொரு தாழ்த்தப்பட்டோன் (அன்விகுதியுடன்) கந்தன்,, வேலன்,, சின்னவன்,, பொன்னன்' என்னும் பெயருடன் இந்துக்கள் கிரகத்திற்கருகிற்கூட வரவிடுவதில்லை. அவனே கிறிஸ்துமார்க்கத்திற் சேர்ந்து ஞானஸ்நானம் பெற்று அந்தோனிப் பிள்ளை சூசைப்பிள்ளை யென்று பெயரையுஞ் சூட்டி ஆங்கிலமுங் கொஞ்சங்கற்று ஒரு சிறு உத்தியோகமும் வாய்க்கப்பெற்றால் அவனை தங்கள் சபைமுதலிய கூட்டத்திற்கும் மேளதாளத்துடன் அழைத்துவந்து எசமானென்று நடுவிருத்தி கைகட்டிநின்று மாலைபோட்டு மரியாதை செய்வதும் எம்முயர்குல இந்துக்கள் வழக்கமாயிருக்கின்றது? இதனால் வருணாச்சிரம தருமத்தின் போற்றல் வெளியாகிறது.

எம்மதமும் சம்மதமென்றேற்கப் படும் இந்துமதத்தில் மேல்சாதி கீழ்சாதியெனப் பெயர் வைத்துக்கொண்டு இந்துமதித்தில் மிகப்பற்றுள்ள தாழ்த்தப்பட்டிருக்கும் இந்துக்களை கிறிஸ்தவர்களாக போகச் செய்வதும் பின்னர் அவர்களிடம் தேடிப் பரிந்து பேசுவதுமாகிய இக் கொடுமைகளை அடியோடழியாவிடில் இந்துமதத்திற்கும், உயர்குலத்தவரெனப் பெருமை பாராட்டிக்கொள்ளும் இந்துக்கள் நிலைமையும் பரிதபிக்கக் கூடியதாய் நேருமென்பதுவே முடிபு. இன்னொரு விஷயத்தை நம் தாழ்த்தப்பட்டவர்கள் கவனிக்க வேண்டும். நம்மைப்போன்றவர்களை முன்னுக்கு கொண்டுவர அநேக கனவான்கள் கங்கணங்கட்டிக் கொண்டு உழைக்கிறார்கள் இதுவே நல்லசமையம் ஒத்துழைக்கவேண்டும்;

"கும்பகர்ணனோடு சகவாசஞ்செய்ய இது சமையமல்ல" சிலபோலிமனுஷர்கள் கிணற்றுத் தவளைக்கு நாட்டுவளப்பமேன் என்றும் உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி வண்ணப் பருந்தாகுமா என்று சொல்லுவார்கள். அவைகளையெல்லாங் கவனிக்காமல் முன்னேற்றமடைய வழிதேட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்,

திராவிட நண்பன்,

## இலங்கை ஆதித் திராவிடர் மகாநாடு.

[கொழும்பு கேம்பல் பிளேஸ் பவுத்தமதபாடசாலை மண்டபத்தில் 21-5-27ல் கூடிய மகாநாட்டில்]

சென்னை சட்டநிரூபணசபை அங்கத்தினர்

**சுவாமி சகஜாநந்தம் அவர்கள்**

நிகழ்த்திய சொற்பெருக்கு.

சகோதர சகோதரிகளே இம்மகாநாட்டிற்குத் தலைமை வஹிக்கும்படி என்னைக் கேட்டுக் கொண்டதற்காக யான் உங்களனைவருக்கும் எனது நன்றியறிதலான வந்தனங் கூறுகிறேன்.

அவைக்கண் மூர்த்திரு (தலைமைவஹி)ப்பர் குணங்கள் எட்டாம். அவையாவன குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அவாவின்மை, அழுக்காறின்மை என்பனவாம். அவை "எட்டுவகை நுதலிய அவையத்தானும்" என்னும் தொல்காப்பியச் சூத்திர உரையானும் "குடிப்பிறப்புடுத்துப்பனுவல்சூடி விழுப்பேரொழுக்கம் பூண்டு காமுறவாய்மை வாய்மடுத்து மாந்தித் தூய்மையிற் காதலின்பந்தூங்கித் தீதறு நடுவுநிலை நெடுநகர் வைகிவைகலும், அழுக்காறின்மையவா வின்மையென, விருபெருநிதியமுமொருதாமீட்டுந் தோலாநாவின் மேலோர் போல்வ என்னும் புறத்திரட்டு ஆசிரியமாலையானும் அறியக்கிடக்கின்றன. இக்குணங்களுள் ஒன்றிற் சிறிதேனுமில்லாத அடியேனைத் தலைமைவகிக்குமாறு கேட்டுக்கொண்டது "அன்பின் பெருக்கால் அறைந்தனர்போலும், மன்பதையுலகம் வஞ்சமே" என்பதற்கிணங்க தாங்கள் என்மீது கொண்ட அன்பின் பெருக்கெனக் காண்கின்றேன்.

ஒரு மகாநாட்டுக்குத் தலைமைவகிப்பவர், அந்த மக்கட்டொகுதியின் முக்கால நிலைகளையும் அறிந்து கூறுபவராயிருத்தல் வேண்டும் மிகப்பண்டைய காலத்தில் இவ்வாதித் திராவிட சமூகம் எவ்வாறிருந்ததென அறிந்து கூறுதற்கேதுவான நூல்கள் என் கண்களுக்ககப்படவில்லை. ஆனல் 'உம்மையின் மறுமை தன்னிலுறுப் பன்னிரண்டு நோக்கில் இம்மையில் விளங்கும் யார்க்கு மவரவரியற்கையாலே என்பதற்கிணங்க தற்போதுள்ள நிலைமைகளையும், ஒழுக்கமுறைகளையுங் கொண்டு பண்டையகால நிலைமைகளில் எனது சிற்றறிவிற் கெட்டியவற்றுள் ஒரு சிலவற்றை ஈண்டுகூறமுற்படுகின்றேன். ஈண்டு பண்டென்பது ஆரியர்கள் குடியேறுவதற்கு முன்டென்பதாம். அதாவது நமது முழுமுதற்கடவுள் சிவபெருமான் மலையரசன் புதல்வியாகிய உமாதேவியாரைத் திருமணம் செய்யுங்கால் திருமணங்காணப் போந்த பிரமன், திருமால், இந்திரன் முதலிய தேவர் குழாங்களும் முனிவர் கணங்களும் மற்றும் மன்னுயிர் கூட்டங்களும் கைலையில் ஒருங்கு சேரக்கூடப்பெற்றதால் வடதிசை தாழ்ந்து தென்றிசை யுயர்ந்தது. அப்போது எப்பொழுதும்போல் பூமியை நிறுத்துவதற்கு இறைவன் திருவுளங்கொண்டு தவசிரேட்டராகிய அகத்தியமுனிவரைப் பார்த்து நீவிர் பொதிகைமலைசசென்று அதன்மீது தங்குக என இறைவன் கட்டளை இட்டருளினர். அகத்தியனர் அக்கட்டளையைச் சிரமேற்றாங்கி துவராப்பதிக்கண் போந்து பதினெண் கோடி அருவாளர், வேளிர் உள்ளிட்டாரைக்கொடு போந்து பொதியின்கண் காடுகெடுத்து நாடாக்கிக் குடியேற்றினர். என்று ஆசிரியர் நச்சினர்க்கினியர் தொல்காப்பிய உரையிற் கூறியுள்ளார். அகத்தியனர் தென்றிசை வந்த காலத்தைக் கணிக்கமுடியவில்லை இக்கதைகள் புராணங்களில் கூறப்பெற்றுள்ளனவாதல் புராணங்கள் தோற்றுவதற்கு முற்பட்ட காலமெனறே கூறல்வேண்டும். அகத்தியரும் பதினெண்கோடி மக்களும் தென்றிசை வருமுன் ஈண்டிருந்த மக்கள்யாரென ஆராய்தல் மிகவும் முக்கியமாம். தமிழ் நாட்டில் பண்டையகாலத்திலிருந்த மக்களைப்பற்றியும் விளைபொருள்கள் பற்றியும் புறநானூற்றில் ஒரு செய்யுள். சருங்கால்வரகே இருங்கதிர்த்தினையே, பொறிகிளரவரையோடு கொள்ளெனநான்கே, பாணன்பறையன் துடியன் கடம்பன், இந்நான்கல்லது குடியுமில்லை என்று கூறுகிறது இச்செய்யுளால் ஏனையமக்கள் குடிபுகு முன் இந்நான்கு குடிகளே பழந்தமிழ் குடிகளாக விருந்தவர்களெனப் புலப்படுகிறது இவருள் பாணரென்போர் இராஜமகேந்திரபுரத்துப் பக்கங்களில் இருக்கிறார்களெனக் கேள்வி. துடியரென்போர் நீலகிரி முதலிய மலைப்பக்கங்களிலுள்ள தொடுவர்களாயிருக்க வேண்டும். கடம்பர் வேடுவர்கள் இப்பதங்களுக்கு மற்றும் பாணர் பாட்டுப்பாடுபவர், பறைர் பறையடிப்பவர் துடியர் உடுக்கையடிப்பவர், கடம்பர் கொம்பூதுபவரெனவும் பொருள் கொள்ளலாம். இந்நால்வருள் பறையரொழிய ஏனைய மூன்று குடிகளும் மிகவும் அருகி இருக்குமிடம் அறியக்கூடாத நிலைமையிலிருக்கிறார்கள்.

ஆனல் பறையரென்பவர்கள் மிகவும் பிரசித்த நிலைமையிலுள்ளார்கள் இவர்களின் இப்பொழுதுள்ள நிலைமையைக் கொண்டு பண்டையக் காலத்திலும், இவர்கள் நிலைமை சிறப்பு மிக்கக் குடிகளாயிருந்திருத்தல் வேண்டுமென கருதற்கிடனுயிருக்கிறது. (தொடரும்)

தேசபக்தன்.

### முதலாம்பக்கத் தொடர்ச்சி.

என்னைப் பாரும் காலையிலிருந்து, பின்னேரவரைக்கும் தங்கச்சி இங்காலேவா, அங்காலே போ தலையைச் சீவு முகத்தைக் கழுவு, பூசற்மாலைப் பூசு, பாட்டைப்படி, வீணையை வாசி, சத்தம் செய்யாதே இதைச்செய் அதைச் செய்யென்று சதாவும் நான் ஓர் பாவைப்பிள்ளையைப் போல் ஆட்டிவைக்கப் படுகிறேன்" என்றாள்.

கனகம் (சிரித்து) நீ என்னும் உலகத்தைப் படிக்கவில்லைப் போலிருக்கின்றதென்றாள்.

ராசம்—என்னை மன்னிக்கவும் பண்டிதரே, தாங்கள் மிச்சம் படித்தவர்கள், வயதில் கூடியவர்கள், தாங்கள் ஷேக்ஸ்பியரென்ன (Shakespeare) அக்ஸ்லி (Huxley) பெயின் (Paine) ஜான் ஸ்டுவேர்ட் மில (J. S. Mill) பயிரன் (Byrar) கீட்ஸ் (Keats) இங்கர்சால் (Ingersole) முதலியவர்களுடைய தத்துவங்களையும், உபதேசங்களையும் படித்திருக்கிறீர்கள் (போதாக்குறைக்கு) இப்பொழுது சாந்தியடிகளுடைய சிஷ்யாகிவிட்டீர்கள் மேலும் பொடியன்களில் 100க்கு 20பேர் தேறுங்காலத்தில் தாங்களும் சோதனையில் தேர்ந்துவிட்டீர்கள். ஆதலால் வீட்டிலிருந்தே உலகத்தை அறிந்துவிட்டீர்போல விருக்கின்றது; என்று பரிகாசம் செய்தாள்.

கனகம் சிரித்துக்கொண்டே 'இளங்கன்று பயமறியாது' யென்பதைப்போல உனக்கு ஒன்றும் விளங்கவில்லைப்போலும் என்றாள்.

'என்ன மச்சாள் என்ன' என்றுச் சொல்லிக்கொண்டே சற்று நெருங்கி முட்டும்படியாக அவளண்டையில் உட்கார்ந்தாள் ராசம்.

கனகம்—"நான் 'இளங்கன்று பயமறியாது' என்றது பகடிக்கல்ல, நீ குழந்தைப்பெட்டை உன்னை மாமாவும், மாமியும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வருகிறார்கள் ஆனல் பெண்களாகப் பிறந்து நாங்கள் அனுபவிக்கப்போகிறதென்ன? எனக்கு நல்லகாலம் வருகின்றதென்ற பொழுதே கவலையா யிருக்கின்றது. எங்களை கிளியை வளர்த்து பூனைக்குக் கொடுப்பதைப்போலவும் கிடாக்களை வேள்விகளுக்காக வளர்ப்பதைப் போல வளர்த்து எங்களுடைய சம்மதமின்றி யெங்களை அடிமையாக்குகின்றார்கள். அது தெரியுமா உனக்கு?

பரபரப்புடன் ராசம் என்ன! ஓம்! நீ சொன்னது இப்பொழுதுதான் விளங்குகின்றது உன் கல்யாணத்தைக் குறித்தன்றே!

கனகம்—கேள் முதலில் நாங்கள் பெண்ணாய்ப்பிறந்து 5, 6 வயது வருமுன்னரே நாங்கள் சக்தியற்றவர்களென்றும், பிரயோசன மற்றவரென்றும், ரோட்டில் போகாதே பொடியன்களோடே விளையாடாதே! வடிவாய் உடுவென்றும், இன்னும் பலவாறாக எங்களை அவமரியாதை செய்தும், பாவைப்பிள்ளைகளை (Dolls) வைத்து விளையாடும் பிராயத்திலேயே சடங்குமுடித்த பெண்களும், வருவதையறியாமல் கல்யாணத்தைப்பேசி பருவமடையுமுன்னரே, இயற்கையா யுள்ளடங்கியிருக்கும் எண்ணங்களை யெழுப்பி நாங்கள் பள்ளிக்குப் போகையிலும் வருகையிலும் போர்டிங்கிலிருந்தால் வசதியாகவும், மற்றக் கூட்டங்களிலோ அல்லது பள்ளிக்கூடத்தினிலும் மற்றப்பெண்களுடன் கதைக்கும் நேரங்களிலும் நாங்கள் அப்படி வாழ்வோம், இப்படியிருப்போம், இன்னரை மணப்போம், இன்னரை முடிப்போமென்று சேர்ந்து கதைத்தும் நவீனங்களைப் படிக்கும் நேரங்களிலும் பாடங்களில் வரும் கதாநாயகர்களைக் கண்டு மனப்பால்குடித்தும் பிறது ஒருவனை எங்களுடைய மனதிலெண்ணி வளருங்காலத்தில் இடிவிழுந்தாப்போல மெய்யாமெய்யாகவே கல்யாணப்பேச்சு நடக்க நேரிடுகின்றது

ஓம் இதிலொன்றும் மாறாகத் தோன்றவில்லையே என்றாள் ராசம்.

கனகம்—பெருமூச்சுவிட்டு "ஐயோ நாங்கள் எங்களுடைய சரீரத்தை பிறர்க்குத் தீமையின்றி, விரும்பியவாறு நடத்தவே சுவந்தரமில்லையே! நான் புத்தியறிந்தநாள் துவங்கி, மிகவும் புத்திசாலியானவரும், படிப்புள்ளவரும், டம்பமற்றவரும், ஜீவகாருண்யமுள்ளவரும், ஏழை எளியவர்களிடத்தில் வாஞ்சையுள்ளவரும், சதாமுகமலர்ச்சியை யுடையவரும் எல்லோரும் வாரும், வாரும் தம்பி, யென்று கொண்டாடப் பட்டவரும் ஆனல் குற்றமற்ற நடுதரக் குடும்பத்தைச் சேர்ந்தவருமாகிய, ஒருவரை மணம்புரிய எண்ணியிருந்த எனக்கு, என் கண்கள் இப்பொழுதுதான் திறக்கப்பட்டன.

ராசம்—'என்ன சங்கடம் ஒன்றும் விளங்கவில்லையே,

கனகம்—இப்பொழுது நான் யாரைக்குறித்துப் பேசினேன் என்பது உனக்கு விளங்கும். உனது மாமியும், அத்தானும் காசுக்கு ஆசைப்பட்டு கௌரியும், தான் மேற்குடி பிறந்தோமென்கின்ற இருமாப்புள்ளவனும் பணமென்றால் பேயும் வாய்திறக்குமென்று யெண்ணுகிறவனும், படிப்பென்பதே மருந்துக்குங் கிடைப்பது அரிதனவனும், குடியனும், தாசிகள் பிரியனும் ஒவ்வோர் நாடகந்தோறும் வரும் பெண்களுக்கு முன்னிருந்த மீசையைத்தடவி அங்கிருக்கும் ஆட்களைக்கொண்டு, அவர்கள் சினேகம்பெற்று அவர்களுக்குச் செலவுசெய்கின்றவனும் சூதுவிளையாட்டில் "எம்டன்' (Emden) என்று பெயர்பெற்றவனும் குதிரைப் பந்தயங்கள்தோறும் சென்று வீட்டிற்கு காரில் மயக்கத்துடன் வந்து கோட்டு, சேட்டு, டை, காலர், கால்சட்டை சப்பாத்துடன் ஆட்கள் கொண்டு போய்க் கட்டிலில் கிடத்தப்பட்டவனுமாயுள்ள ஓர்பேய் இங்கிலீஷ்ப் படித்தவனை மணம்புரிய வேண்டுமென்கின்ற அபேட்சையினல் ஏவப்பட்டுக் காசுக்கு நமஸ்காரம் செய்யும், ஆச்சியைக்கண்டு என்னைக் கல்யாணஞ்செய்து தரும்படி கேட்டது உனக்குத் தெரியுந்தானே?"

(தொடரும்.)


### விசேஷ அறிவிப்பு.

பியானே லில்லிபுளூற், பிடில், ஆர்மோனியம், கிறமபோன் முதலிய சகல வாத்தியங்களும், கடிகாரங்களும் திருத்திக் கொடுக்கப்படும். மேற்கூறிய சருவிகளுக்கும் தேவையான எந்தச் சாமான்களும் விலைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

கே. எஸ். இரத்தினம்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

### எஸ். கே. லோட்டன் அன்டுகோ.

பறங்கித்தெரு, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் காலஞ்சென்ற ஸ்ரீமான் க லோட்டன் காலந்தொடங்கி, நாங்கள் புகைப் படம் எடுத்து வருகிறோம் உங்களுக்கு உங்களைப்போல காண விருப்பமிருந்தாலும் அல்லது மற்றும் பட்சமுள்ளவர்களை நேரிற் காண விருப்பமிருந்தாலும் செய்வதேன்ன?

எங்களுக்கு ஓர் கார்ட்டு எழுதி அறிந்து கொள்ளவும்.

மானேஜர்,
S. K லோட்டன் & Co

### ஓரியன்டல் ஸ்டோர்ஸ்.

பெரியதெரு, யாழ்ப்பாணம்.

எங்களுடைய இதர வியாபாரங்களுடன் பலபேர் வேண்டுகோளின்படி வீட்டிற்கு வேண்டிய கதிரைகள், கட்டில்கள், மேசைகள், அலுமாரிஸ்கள் பொதுவாக வீட்டிற்கு வேண்டிய எல்லாவித மரச்சாமான்களும், எங்களுடைய மாதிரிகளைக்கொண்டு திறமான தச்சர்களால் கொழும்பில் செய்வித்து யாவரும் விரும்பும் படியாயும் யாவரும் வாங்குவதற்கேற்ற விலைகளில் விற்கின்றோம்.

ஒருதரம் வந்துபாருங்கள்.

வ. அ. துரையப்பா,
Proprietor.

### யாழ்ப்பாணம் அப்போதுக்கரீஸ்.

(பொன்னுச்சாமி ஷாப்)
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

பட்டணத்திற்கு சாமான் வாங்கவந்தால், பிற கடைகளின் விலைகளை அறிந்திருந்தாலும் எங்கள் ஷாப்பின் விலைகளையும் சாமான்களையும் ஒத்துப்பார்த்து வாங்கவும்.

பலவிதமான வேஷ்டிகள் சால்வைகள் ஷர்ட்ச் சீலைகள் மற்றுமுள்ள எல்லாச் சாப்பு சாமான்களும் நேரிலும், பிரத்தியேகமான ஏஜண்டுகள் மூலமாகவும் வரவழைத்து விற்கின்றோம்.

டாக்குத்தர்களால் குறிக்கப்பட்ட எல்லாவித மருந்துவகைகளும், எங்கள் மருந்துசாப்பு பிரிவில், நற்சாட்சிப் பத்திரம் பெற்ற ஆட்களைக்கொண்டு, விலை சரசமாயும், குணக்கமின்றியும், தயாரித்துக் கொடுக்கப்படும் எல்லா பேட்ன்ட் மருந்துகளும் கிடைக்கும்.

Dr. S Ponnusamy,
Proprietor & Manager.

### N. M. Krishnaraju & Co,

Rangai Gowuden Street,
COIMBATORE.

### விலைஜாப்தா.

200 நெ. 2½ வீதி அகலம் 5 முளம் நீளம் கருப்பு, சிகப்பு சன்னக்கரை சிட்டை சாதா சால்வை 1-க்கு 1-12 0

டை மாதிரி 6 முளம் சால்வை 1-க்கு 2-2 0

டை மாதிரி 6 முளம் பரமாஸ் சால்வை 1-க்கு 2-2 0

மேற்படி மாதிரி 5 முளம் சால்வை 1-க்கு 1-12.0

டை மாதிரி கால்இஞ்சு பெரியமுந்து 5 முளம் சால்வைக்கு 2-0 0

டை 6 முளம் சால்வை 1-க்கு 2.6 0

டை மாதிரி கருப்பு, சிகப்பு, சன்னக்கரை சன்ன கெட்டிக்கம்பியும் பக்கத்தில் சரிகை கம்பியும்' சிட்டையும், பலமாதிரி கம்பி போட்ட 5 முளம் சால்வை 1-க்கு ரூபாய் 3 முதல் 3-8-0 4, 5, வரை.

டை மாதிரிகளில் 6 முளம் சல்வை 1-க்கு 4 முதல் 4-8-0 5, 6 வரை.

டை ஜரிகை சன்னக்கரை பின்னல் ஜரிகை முந்தி 5 முளம் சால்வை 1க்கு 3 முதல் 3-8-0 4, 5 வரை.

டை 6 முளம் சால்வை 1-க்கு 4, 5, 6

டை மாதிரி சரிகை சன்னக்கலவு சாதாபிளேன் சரிகை முந்தி 5 முளம் சால்வை 1-க்கு 3 முதல் 3-8-0 4, 5, 6 வரை

டை மாதிரி 6 முளம் 4, 4-8-0 5, 6, 7 வரை.

டை மாதிரி சரிகை குண்டஞ்சு சரிகை பிளேன் 1, 2, 3 இஞ்சு முந்தி 5 முளம் சால்வை 1-க்கு 5, 6, 6-8 0 7 வரை

டை மாதிரி 6 முளம் சால்வை 1-க்கு 6-6-8-0 7, 8, 10 வரை

டை மாதிரி கரை மூடிய விபூதிக்கரை சரிகை கரை 1, 2, 3 இஞ்சு முந்தி 5 முளம் சால்வை 1-க்கு 7, 8, 9, 10, 12 வரை

மேற்படி மாதிரி பஞ்சு நூல் கலவாத பனாரஸ் மாம்பிஞ்சு 1, 2, 3 இஞ்சு முந்தி 5 முளம் சால்வை 1-க்கு 6, 6-8-0, 7, 8, 9, 10, 12, வரை

டை மாதிரி 6 முளம் 8 முதல் 10, 12, வரை.

200 நெ. ஜரிகை ஜிமீன்கொடி மாம்பிஞ்சு 2, 3, 4, 5, இஞ்சு முந்தி 5-6 முளம் சால்வை 1-க்கு 15 முதல் 16, 17, 18, 19, 20 வரை

டை மாதிரி பனாரஸ் மாம்பிஞ்சு வெள்ளை 2, 3, 4 இஞ்சு ஒரு புரம் சரிகை முந்தி குண்டி 16 முளம் ரூபாய் 19 முதல் 20, 22, 25 வரை மூலை மாம்பிஞ்சு சேலைகள்,

டை மாதிரி வெள்ளை அனஸ்கொடி துத்திப்பூக்கொடி, கமல் கொடி வெத்திலை கொடி பலமாதிரி கொடி மாம்பிஞ்சு 3 4, 5, 6 இஞ்சு ஒருபுரம் சரிகை முந்தி குண்டி 25, 30, 35 40, 45, 50 வரை மூலை மாம்பிஞ்சுபோட்ட சேலைகளும் டை மாதிரி மூலை மாம்பிஞ்சு போடாத சேலைகளும் உண்டு.

டை மாதிரி சரிகை குண்டஞ்சும் சரிகை விபூதிக்கரையும் வைத்து 2, 3, 4, 5 இஞ்சு ஒரு புரம் சரிகை முந்தி மூலைப்புரம் பிஞ்சு வைத்தும் மூலை மாம்பிஞ்சு வையாத 16 முளம் சேலையும் 1-க்கு 10, 18, 20, 25 வரை.

டை மாதிரிகரை கத்திரிப்பூக்கலர் பூரோஜ கலர் ஊதா, நீலம் கலரில் 16 முளம் மூலை மாம்பிஞ்சு வைத்த சேலை 1-க்கு 20, 22, 25 வரை

டைமாதிரி பூரோஜ, நீலம், ஊதா, கருப்பு பனிஸ் மாம்பிஞ்சு 20, 22, 25வரை 16முளம்சேலை.

டை மாதிரி பல கொடி செடிபோட்ட மூலை மாம்பிஞ்சு 25, 30, 35 வரை 16 முளம் சேலை

பட்டும் பருத்தி, ரோஜ, பூரோஜ, சிகப்பு, நீலம், ஊதா, கருப்பு, பச்சை, ஈயக்கலர், கத்திரிபூக்லெர், லேட்டுப் பச்சை, இலைப்பச்சை இன்னும் பலமாதிரி கலரில் துத்திப்பூக் கொடி, செந்திரகாந்திக்கொடி, ஜடனகம், வெத்திலைக் கொடி, அன்னஸ்கொடி, பலமாதிரிபேட்டு மூலை மாம்பிஞ்சு 5, 6, 7, 8 10 இஞ்சு ஒருபுறம் ஜரிகை முந்தி குண்டி 16 முளம் சேலைகள் 30, 35, 40, 45 ,50 ,60 வரை.

மேற்படி மாதிரி சரிகை கொட்டடி போட்ட 16 முளம் 1-க்கு 50, 60, 70 வரை.

மேற்படி மாதிரி எல்லாக்கலர் களிலும் ரவிக்கை 1-க்கு ரூ 2-8-0 3, 4, 5 வரை சாதா ரவிக்கைகள்.

மேற்படி மாதிரி ஜரிகை கொட்டடிபோட்ட ரவிக்கை 1-க்கு 4, 5, 6 வரை.

200 நெம்பரில் பல கரைகளில் 2½ முளம் சவுக்கங்கள் கிடைக்கும்.

வெண்பட்டும் எல்லாக்கலர்களும் பட்டும் பருத்தி கலந்த 5 முளம் சால்வை 1-க்கு 4 முதல் 5, 6, 7, 8, 9, 10, வரை.

மேற்படி மாதிரி பல ஜரிகை பேட்டுகள் போட்டு பலவித கரைகளில் 6 முளம் சால்வை 1-க்கு 10 முதல் 15, 20, 25 வரை.

மேல்கண்ட தினுசுகள் முழுதும் நாங்கள் சொந்தத் தறிகளில் தயார்செய்து அனேக இடங்களுக்கு அனுப்பி வருகிறோம் தங்களுக்கு விருப்பமான தினுசுகளுக்கு ஆர்டர் எழுதி அனுப்பினல் விலைகள் ரொம்பவும் சலீசாக வி. பி. போஸ்ட்டில் அனுப்பி வைக்கிறோம். தேள்வையிருந்து எழுதுவோர்கள் தங்கள் முழுவிலாசத்தை தயவுசெய்து எழுதவும், தவிர, கிராமம், போஸ்டு தாலூக்கா விபரமாக எழுதி அனுப்பவேணுமாய்க் கேட்டுக் கொள்வதும் தவிர்த்து கேட்லாக் பார்த்த நண்பர்கள் யாவரும் அவசியம் தேள்வையான தினுசுகளுக்கு ஆர்டர் எழுதுவீர்கள் என்று நம்புகிறோம்.

தவிர, கதர் தினுசுகளும் பனுக்கா சேலை தரங்களும் பாலக்காடு துண்டுகளும் மில்லுகளில் தயாராகும் காடாவும் வேஸ்டி ஜோடிகளும், ஷர்ட்டுத் துணிகளும் 8 நெம்பர் முதல் 10, 12, 20 நெம்பர் நூல் பேல்களும் ரொக்க விலைக்கு கமிஷனுக்கு வாங்கி அனுப்பப்படும்.

இப்படிக்கு தங்கள் அன்புள்ள;

என். எம். கிருஷ்ணராஜு அண்டு கோ.,
ஜவுளி வியாபாரம்,
ரங்கேகவுண்டன் வீதி,
கோயமுத்தூர்.



Printed by P. A. Krishnan for and on behalf of the Jaffna depressed classes Association Chunnakam published at the Saiva Pragasa Press, Vannarponnai Jaffna.

Published by
P. A. Krishn